உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.518 /2023

பெயர் :சூசையம்மாள் அ.சா.2)
தகப்பனார் பெயர் :
கணவர் பெயர் :சண்முகம்
வயது :36
கிராமம் :K.புதுார்
வட்டம் :மதுரை
தொழில் :கட்டிடவேலை

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

03.11.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளில் 1ம் எதிரி விஜய் என்னுடைய சித்தி மகன் ஆவார். அ.சா.1 என் மகன் ஆவார். பிரியா என் மகள் ஆவார். சம்பவம் நடந்த போது நான் இல்லை. என்ன சம்பவம் நடந்தது என்பது பற்றி காவலர்கள் என்னை விசாரிக்கவில்லை

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

எ.த.கு.வி :

எனது மகன் இதற்கு முன்பாக உரக்கம்பெனியில் வேலை செய்தார். நானும் அவருடன் சேர்ந்து வேலையில் இருந்தேன்.அப்போது மணி என்பவரும அங்கு வேலை செய்து வந்தார். என்னுடைய மகன் விஜய் உடைய மனைவிக்கு தவறுதலாக மணிக்கு அனுப்பிய செய்தியை மாற்றி அனுப்பிவிட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த விபரம் தெரியும் என்றும் நான் வேண்டுமென்று மகனுக்க ஆதரவாக ஆஜர் எதிரிகளுடன் சமரசம் செ்து கொண்டு பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 முனியசாமி என் தாயார் வீட்டில் தான் முன்பு வசித்து வந்தார்

என்றால் சரிதான். அவருக்கு காயம் பட்ட விபரம் தெரியுமா என்றால் கேள்விபட்டேன். நானும் அவரை பார்ப்பதற்காக அரசு ராசாசி மருத்துவமனையில் மதுரையில் சென்றேனா என்றால் சென்றேன். அங்கு காவலர்கள் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. 1வது எதிரி எனது சித்தி மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.11.03 22:33:28 +0530

Assistant Sessions Judge

Melur